# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## S.C. NO.107/2018

**12.10.2023 - அ.சா. 4 குணசேகரன் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விஜயகாந்த் தேமுதிகா கட்சியில் உறுப்பினராக உள்ளேன். பாபு இறக்கும் போது நான் வார்டு மெம்பராக இருந்தேன் என்றால் சரிதான். அதனால் நான் பிரச்சனை ஏற்பட்டால் பஞ்சாயத்து செய்வேன் என்றால் சரியல்ல. எதிரியின் குடும்பத்திற்கும், பாபு குடும்பத்திற்கும் உள்ள குடும்பத் தகராரை பற்றி எனக்கு தெரியாது. வீட்டு இடம் சம்மந்தப்பட்ட பிரச்சனை பற்றி எனக்கு தெரியாது. அவர்களது நிலம் சம்பந்தமாக பிரச்சனை பற்றியும் எனக்கு தெரியாது. பாபு அப்பாவின் பெயர் பாலு.

பாபுக்காவும், பாலுக்காகவும் அவர்களது நிலம் சம்மந்தமான பிரச்சனைக்கு காவல் நிலையம் சென்று உதவி செய்தேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்மந்தமாக புகார் கொடுப்பதற்கு காவல் நிலையத்திற்கு நானும் சென்றேன் என்றால் சரியல்ல. பாபு எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது என்றும், பாபு குடும்பத்திற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க செல்லவில்லை, பாபு இறந்த அன்று இரவு 7 மணிக்கு சென்றேன். அப்போது என்னுடன் பாபுவின் அப்பா, சரளா ஆகியோர் வந்திருந்தார்கள். புகார் யார் கொடுத்தார்கள் என்றால் பாபுவின் அப்பா புகார் கொடுத்தார்.

அப்போது நாங்கள் ஒருவரை ஒருவர் ஆலோசனை செய்து புகார் கொடுக்க வேண்டும் என்று பேசினோம் என்றால் சரியல்ல. புகாரை நான் எழுதிக் கொடுக்கவில்லை. பாபுவின் அப்பாதான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். புகார் எழுதும் போது நான் உடன் இருந்தேன். அந்த புகாரில் பாபு, சரளா பார்த்ததாக எழுதிக் கொடுத்துள்ளாரா என்றால் எழுதிக் கொடுத்துள்ளார். நானும் சம்பவத்தை பார்த்ததாக எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பாபுவின் அப்பா நான் சம்பவத்தை பார்த்ததாக எழுதிக் கொடுக்கவில்லை என்றும், தற்போது நான் சம்பவத்தை பார்த்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

புகார் கொடுக்க போயிருந்தபோது போலீசார் சம்பவம் நடந்ததா என்று என்னிடம் கேட்டார்கள் நான் பார்த்ததாக சொன்னேன். நான் சொன்னதை போலீசார்

எழுதிக் கொண்டார்கள். யாரும் என்னை இதற்கிடையில் சொல்லிக்கொடுக்கவில்லை என்றால் விசாரிக்கவில்லை. சம்பவத்தை சரளா நேரடியாக பார்த்தார் என்ற விவரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை. சிரஞ்சீவி, வேலு, குணசேகரன் ஆகியோர்களும், ஊர்மக்களும் அங்கு இருந்தார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். அடிப்பட்டவுடன் நான் உடனடியாக அவரை மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை என்றால், ஆம்புலன்சில் அழைத்து சென்றார்கள் நான் பயந்து ஓடிவிட்டேன். கையில் கத்தி இருப்பதால் என்னை ஏதாவது செய்துவிடுவார்கள் என்று பயந்து ஓடிவிட்டேன். சிரஞ்சீவி, ஊர்மக்கள் 10 பேர், வீராசாமி ஆகியோர்கள் பாபுவை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள்.

போலீசார் விசாரணையில் நாங்களும் அழைத்து சென்றோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. இறந்து போன பாபுவும், நானும், அப்பா பாலுவை திருவண்ணாமலை அரசு மருத்துமனைக்கு சென்று சேர்த்தோம் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சரளா, இறந்தவரின் அப்பா ஆகிரோரை அழைத்துக்கொணடு காவல் நிலையம் சென்றேன் என்றால் அவர்கள் தான் அழைத்து சென்றார்கள். இறந்து போன பாபுவின் அப்பா பாபுவை அரசு மருத்துவமனையில் சேர்த்தாரா என்றால் சேர்த்தார். போலீஸில் புகார் கொடுத்து விட்டு வந்து மருத்துவமனையில் சேர்த்தார் என்றால் சரியல்ல.

போலீசார் விசாரணையில் சம்பவம் 25.4.2013ல் மாலை 6.45 மணிக்கு நடந்தது என்று சொன்னேன். பாபுவை சுந்தரமூர்த்தி கத்தியால் அவரின் தலையின் பின்பக்கத்தில் அடித்து என்று போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நெஞ்சு பகுதியில் குத்தினார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பின்புறத்தில் அடித்த காயத்தை நான் பார்த்தேன். நெஞ்சு பகுதி என்பது மார்பு பகுதி என்று சாட்சி காண்பித்தார். மார்பு பகுதியில் காயம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. காயம் இருந்தது. நெற்றியில் குத்தினார் அவருக்கு நெற்றியில் காயம் இருந்தது. நான் பயந்து கொண்டு எங்கே ஓடினேன் என்றால் என் வீட்டிற்கு ஓடிவிட்டேன்.

காவல் நிலையத்திற்கு பாலு, சரளா என்னை அழைத்து சென்றார்களா என்றால் நானாக சென்றேன். என்னை பாலுவின் அப்பா பாபு போன் பன்னி வரவழைத்தார். இந்த நீதிமன்றத்திற்கு சாட்சி சரளா வந்துள்ளார் என்றால் சரிதான்.

என் சரளா அழைத்து வந்தாரா, என்னை சரளா அழைத்து வந்தாரா என்றால் நான் தான் அழைத்துவந்தேன். இதற்கு முன் இந்நீதிமன்றத்தில் சரளா சாட்சியம் அளிக்க வந்தார்களா என்றால், பாலு அவர் மனைவி வந்திருந்தார்கள் நான் வரவில்லை. நான் சரளா சொல்லி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும், சரளாவிற்கும் நெருக்கம் உள்ளதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும், சரளாவிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- குணசேகரன்

Taken down by me in Open Court read over to the witness
and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.